විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මහලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretarlat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No: ஓய்வூ/சுற்றறி/2009    දිනය / திகதி / Date: 22.03.2010

ஓய்வூதிய சுற்றுநிருபம் 02/2010

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும்,
அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்,

**02.01.2004 – 02.12.2004 காலப்பகுதியினுள் ஓய்வு பெற்ற சுகாதாரத்துறை அலுவலர்களுக்கான ஓய்வூதியம் வழங்குதல்**

30.12.2003 திகதியுடைய அரச நிர்வாகச் சுற்றுநிருபம் 15/2003 இன் படி அரச சேவை அலுவலர்களுக்கு 01.01.2004 திகதி தொடக்கம் சம்பள அதிகரிப்பொன்று உரித்தானது. எனினும் அச்சம்பள அதிகரிப்பு, பொதுச் சுற்றுநிருபம் 1 - 2/2004 மூலமான சம்பள அதிகரிப்பின் காரணமாக, சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு கிடைக்கவில்லை. அரச நிர்வாகச் சுற்றறிக்கை 15/2003 இன் படி அதுவரை 08 இலட்ச இலக்கத்தொடரிலிருந்து ஓய்வூதிய இலக்கம் வழங்குதல் இரத்துச் செய்யப்பட்டு, 01.01.2004 திகதி முதல் செயற்படும் வண்ணம், 16.01.2004 திகதியுடைய ஓய்வூதியச் சுற்றுநிருபம் 03/2004 மூலம் 09 இலட்ச இலக்கத் தொடரிலிருந்து ஓய்வூதிய இலக்கங்களை வழங்குதல் தொழிற்படலாயிற்று.

02.01.2004 முதல் 01.12.2004 வரையான காலப்பகுதியினுள் ஓய்வு பெற்ற சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு 09 இலட்ச இலக்கத் தொடரிலிருந்து ஓய்வூதிய இலக்கங்கள் வழங்கப்படாததுடன், அவர்களுக்கு ஓய்வூதியச் சுற்றுநிருபம் 1/98 மூலம் வழங்கப்பட்ட 08 இலட்ச இலக்கத் தொடரிலிருந்தே இலக்கங்கள் வழங்கப்பட்டன.

இக்காரணத்தின் கீழ் 02.01.2004 முதல் 01.12.2004 வரையான காலப்பகுதியினுள் ஓய்வு பெற்ற சுகாதாரத்துறை ஓய்வூதியர்களுக்கு 08 இலட்ச இலக்கத் தொடரிலிருந்து ஓய்வூதிய இலக்கங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக, சில பிரதேசச் செயலாளர்களினால் 01.01.2004 திகதி தொடக்கம் தொழிற்படுகின்ற, 31.12.2003 திகதியுடைய ஓய்வூதியச் சுற்றுநிருபம் 17/2003 மூலம் வழங்கப்பட்ட 10% சம்பள அதிகரிப்பினை வழங்கி ஓய்வூதியத்தினைக் கணிப்பிட்டுள்ளதுடன், ஓய்வூதியச் சுற்றுநிருபம் 17/2003 இன் பிரகாரம் 01.01.2004 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்யுமாறு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் கீழ் இச்சம்பள அதிகரிப்பினை வழங்காது, சில பிரதேசச் செயலாளர்களினால் ஓய்வூதியம் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் 02.01.2004 முதல் 01.12.2004 வரையான காலப்பகுதியினுள் ஓய்வு பெற்ற சுகாதாரத் துறையின் 08 இலட்ச இலக்கத் தொடரில் ஓய்வூதிய இலக்கங்களைப் பெற்றுள்ள ஓய்வூதியர்களுக்கும் 31.12.2003 திகதியுடைய ஓய்வூதியச் சுற்றுநிருபம் 17/2003 மூலம் வழங்கப்பட்டுள்ள 10% சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை அறியத்தருகின்றேன்.

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:-

1. செயலாளர் - அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு
2. செயலாளர் - நிதி அமைச்சு
3. செயலாளர் - சுகாதார மற்றும் போசனை அமைச்சு
4. கணக்காய்வாளர் நாயகம்


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 | |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 | |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 | E-mail: pensions@sltnet.lk |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 | Web site: www.pensions.gov.lk |